ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1823/5 - 2013 අගෝස්තු මස 12 වැනි සඳුදා - 2013.08.12
*1823/5 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்*

*2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் (3), (3அ) மற்றும் (4) ஆம் உப பிரிவுகளுடனும் 104 அ ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 212 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் விடுக்கப்படும் ஒழுங்குவிதி.*

இந்த ஒழுங்குவிதிகள் 2013,ஏப்பிறல் 1 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறுவதுடன் அத்திகதியிலிருந்து 2008, ஏப்பிறல் 22 ஆந் திகதிய 1546/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை பின்வரும் ஒழுங்குவிதிகளால் பதிலீடு செய்யப்படுகின்றன.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2013, ஓகத்து 12.

**ஒழுங்குவிதிகள்**

இந்த ஒழுங்குவிதிகளானது (பகுதி I மற்றும் பகுதி II இல் குறிப்பீடு செய்யப்பட்டவாறு) "ஒப்படைப்பு விலையிடல் ஒழுங்குவிதிகள்" என எடுத்துக்காட்டப்படலாம்.

பகுதி I

சர்வதேச மாற்றல்கள் மீதான ஒப்படைப்பு விலையிடல் ஒழுங்குவிதிகள்.

1. ***கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை*** - தொடர்புடைய இரண்டு தொழில் முயற்சிகளுக்கிடையே நிகழ்த்தப்படும் எந்த கொடுக்கல் வாங்கலொன்றின் போதும் உழைக்கப்படும் இலாபம் மற்றும் எழுகின்ற உழைக்கும் அல்லது கொடுக்கப்படும் வருமானம் அல்லது உறப்பட்ட நட்டம் ஆகியன கணக்கிடப்படும் கருமத்துக்கான 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 104 (3) ஆம் பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை மிகவும் தகுந்த முறையாகிய பின்வரும் முறைகளிடையே ஏதேனும் முறையொன்றின் மூலம் நிர்ணயிக்கப்படும்.

(அ) ***ஒப்பிடத்தக்க கட்டுப்பாடற்ற விலைமுறை*** :

இம் முறையின் கீழ் -

(i) ஒப்பிடத்தக்க கட்டுப்பாடற்றதாக ஒப்படைக்கப்பட்ட ஆதனமொன்றின் அல்லது வழங்கப்பட்ட சேவையொன்றின் தொடர்பில் அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்களுக்காக அறவிடப்படும் அல்லது செலுத்தப்படும் விலை கண்டறியப்படுகின்றது ;

(ii) கொடுக்கல் வாங்கல் மற்றும் ஒப்பிடத்தக்க கட்டுப்பாடற்ற விலைகளுக்கு இடையே அல்லது சந்தை விலை மீது முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அவ்வாறான கொடுக்கல் வாங்கல்களுக்கு உள்ளாகும் செயற்பாடுகளில் ஏதேனும் வேறுபாடுகள் இருப்பின் குறிப்பிட்ட விலைகள் சீராக்கப்படும் ;

(iii) அவ்வாறு சீராக்கப்படும் விலை கையளிக்கப்படும் ஆதனத்தின் அல்லது கொடுக்கல் வாங்கலில் வழங்கப்படும் சேவைகளின் தொடர்பில் “சீராக்கப்பட்ட விலை” என்பது கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(ஆ) ***மீள் விற்பனை முறை*** :

இந்த முறையின் கீழ் -

(i) தொடர்புடைய கம்பனியொன்றிலிருந்து கம்பனியொன்று சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் போது அல்லது சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது செலுத்தும் விலை தொடர்பற்ற தொழில் முயற்சியொன்றுக்கு மீள் விற்பனை செய்யப்படும் போது செலுத்தும் விலை கண்டறியப்படும் ;

(ii) தொழில் முயற்சியொன்றின் திரண்ட சாதாரணமான நிகர இலாபம் எல்லையிலிருந்து குறித்த மீள் விற்பனை விலையைக் குறைத்தல் அல்லது தொடர்பற்ற தொழில் முயற்சியொன்றினால் ஒப்பிடத்தக்க கட்டுப்பாடற்ற கொடுக்கல் வாங்கலொன்றின் போது அல்லது கொடுக்கல் வாங்கல்களில் அதே அல்லது அதைப் போன்ற சேவைகளை மீள் விற்பனை அல்லது அதைப் போன்ற ஒப்பிடத்தக்க கட்டுப்பாடற்ற கொடுக்கல் வாங்கலொன்றில் அல்லது அத்தகைய பல கொடுக்கல் வாங்கல்களில் பெற்றுக்கொள்ளுதல் அல்லது வழங்குதல் ;

(iii) அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் விலை ஆதனம் கொள்வனவு செய்யும் போது அல்லது சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது தொழில் முயற்சியினால் உறப்படும் செலவினங்களினால் மேலும் குறைக்கப்படும் ;

(iv) அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட விலை, திறந்த சந்தையில் மொத்த நிகர இலாப எல்லை விலை மீது தீவிர தாக்கம் ஏற்படுத்தக் கூடியவாறான கொடுக்கல் வாங்கல்களில் மற்றும் ஒப்பிடக்கூடிய கட்டுப்பாடற்ற கொடுக்கல்வாங்கல்கள் அல்லது அதுபோன்ற கொடுக்கல் வாங்கல்களுக்கு உட்படும் தொழில்முயற்சிகளிடையே ஏதேனும் பின்பற்றக் கூடியவாறான கணக்கீட்டுச் செய்முறைகளிலுள்ள வேறுபாடுகளையும் உள்ளடக்கிய செயற்பாட்டு வேறுபாடுகளையும் பிற வேறுபாடுகளையும் உள்ளடக்கிய உள்ளெடுப்பதன் பொருட்டு சீராக்கப்படும்;

(v) இப் பந்தியின் (iv) ஆம் உப பந்தியின் இன் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட சீராக்கப்பட்ட விலை, வியாபாரமொன்றினால் தொடர்புடைய வியாபாரத்திடமிருந்து ஆதனத்தின் கொள்வனவு செய்தலின் போது அல்லது சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது தொடர்பு இல்லாத விலையாகக் கவனத்திற்கொள்ளப்படும் ;

(இ) ***செலவினம் சேர்க்கப்பட்ட விலைமுறை*** :

இந்த முறையின் கீழ் -

(i) தொழில்முயற்சியினால் தொடர்புடைய தொழில் முயற்சிக்கு சொத்துக்களின் ஒப்படைப்பொன்றின் போது அல்லது சேவைகள் வழங்கப்படும் போது குறித்த வியாபாரத்தினால் செய்யப்பட்ட நேரடியான அல்லது மறைமுகமான உற்பத்திச் செலவுகள் நிர்ணயிக்கப்படும் ;

(ii) ஒப்பிடக்கூடியவாறான கட்டுப்பாடற்ற கொடுக்கல் வாங்கலொன்றில் அல்லது கொடுக்கல் வாங்கல்களில் வியாபாரம் அல்லது தொடர்பில்லாத தொழில் முயற்சியினால் சமமான அல்லது அவை போன்ற ஆதனம் அல்லது அதே சேவைகள் கட்டுப்படுத்தப்படாத கைமாற்றலில் அல்லது கொடுக்கல் வாங்கல்களில் அல்லது சேவை வழங்கலில் ஏற்படும் செலவினத்தின் இதே கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட வழக்கமான முழுமொத்த இலாபத்தின் அளவு தொகை நிர்ணயிக்கப்படும்.

(iii) குறித்த கொடுக்கல் வாங்கல் அல்லது ஒப்பிடக்கூடியவாறான கட்டுப்பாடற்ற அவ்வாறான கொடுக்கல் வாங்கலுக்குட்படக்கூடிய வியாபாரங்களுக்கிடையில் திறந்த சந்தையில் நிலவும் இலாப எல்லைக்குத் தீவிர தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தொழிற்பாட்டு ரீதியாக அல்லது வேறு ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படுமெனில் இப்பந்தியின் (ii) ஆம் உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சராசரி நிகர இலாப எல்லை வரை தேவையான செம்மையாக்கங்கள் மேற்கொள்ளப்படும்.

(iv) இப்பந்தியின் (i) ஆம் உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினத்துடன் இப் பந்தியின் (iii) ஆம் உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இலாப எல்லை சேர்க்கப்படும் ;

(v) அவ்வாறு பெறப்படும் பணம் தொழில் முயற்சியின் ஆதனம் வழங்குதல் அல்லது சேவை வழங்குதலுக்குரிய தொடர்பற்ற விலையாகக் கருதப்படும்.

(ஈ) ***இலாபம் கூறுபடுத்தும் முறை*** :

இந்த முறை பிரதானமாக விசேடமாக கட்புலனாகாத பொருட்கள் அல்லது எந்தவொரு தனித்தனியாக விலையின் பெறுமானத்தைத் தீர்மானிக்கும் விடயத்தை மதிப்பீட்டுக்குட்படுத்த முடியாத அளவிற்கு ஒன்றிணைப்புகளைக் கொண்ட பல்வகையான சர்வதேச கொடுக்கல் வாங்கல்களைக் கொண்ட சர்வதேச கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக முதன்மையாக இருப்பதுடன், அதன் மூலம் -

(i) தொடர்புடைய வியாபாரமொன்று சர்வதேச கொடுக்கல் வாங்கலொன்றில் ஈடுபடுவதன் ஊடாக உழைக்கும் திரண்ட நிகர இலாபம் தீர்மானிக்கப்படும் ;

(ii) குறித்த இணைந்த நிகர இலாபம் உழைக்கப்படும் போது ஒவ்வொரு தொடர்புடைய வியாபாரத்திலும் ஒப்பிடக்கூடிய பங்களிப்பை மதிப்பீடு செய்வதற்காக வியாபாரத்தின் செயலாற்றுகை, பயன்படுத்தப்பட்ட சொத்துகள் அல்லது பயன்படுத்தப்படவுள்ள சொத்துகள், ஊகிக்கப்பட்ட ஆபத்துகள் மற்றும் தொடர்பற்ற வியாபாரமொன்று அது போன்ற சூழலொன்றில் ஒப்பிடக்கூடிய விடயப் பொறுப்பொன்றில் ஈடுபட்டு எவ்வாறு பங்களிப்பொன்றை வழங்குகின்றது என்பதை காண்பிக்கும் விசுவாசமான வெளிச்சந்தை தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும் ;

(iii) இப் பந்தியின் (ii) ஆம் உப பந்தியில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளவாறு இணைந்த நிகர இலாபமானது வியாபாரத்தினால் வழங்கப்பட்டுள்ள ஒப்பிடப்பட்ட பங்களிப்பின் சமமான நூற்று வீதத்தின் பிரகாரம் வியாபாரங்களுக்கு இடையே பகிர்து வேறாக்கப்படும்.

(iv) அவ்வாறு மதிப்பீட்டாளருக்கு பகிர்ந்து வேறாக்கப்பட்ட இலாபம் சர்வதேச கொடுக்கல் வாங்கலுக்குரிய தொடர்பற்ற விலையைத் தீர்மானிப்பதற்காக பயன்படுத்தப்படும்.

எவ்வாறாயினும், இப்பந்தியின் (i) ஆம் உப பந்தியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இணைந்த நிகர இலாபம் ஆரம்பத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள சர்வதேச கொடுக்கல் வாங்கல் வகையின் பிரகாரம் தகுதியான பயன்களைப் பெற்றுக் கொடுப்பதொன்றாகவும், சுயாதீனமான வியாபாரமொன்று சம வகை இனக் கொடுக்கல், வாங்கலொன்றில் ஈடுபடுவதனால் கிடைக்கப்பெறும் சந்தைப் பயன்களைக் கவனத்திற்கொண்டு ஒவ்வொரு வியாபாரத்துக்குரிய பகுதியை வேறாக்கிக் கொடுத்து அதன் பின்னர் இப்பந்தியின் (ii) மற்றும் (iii) ஆம் உப பந்திகளில் நிச்சயிக்கப்பட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளவாறு வியாபாரங்களில் ஒப்பீட்டு ரீதியான பங்களிப்புக்குச் சமவீதமாக மேற்கூறப்பட்ட பகிர்ந்தளித்தலின் பின்னர் எஞ்சுகின்ற நிகர இலாபம் வியாபாரங்களிடையே பகிர்ந்தளிப்பதுடன் அவ்வாறான சந்தர்ப்பமொன்றில் முதலாவதாக பகிர்ந்தளிக்கப்பட்ட நிகர இலாபத்தின் கூட்டுத்தொகையும் வியாபாரங்களில் ஒப்பீட்டு ரீதியான பங்களிப்பின் பிரகாரம் பகிர்ந்து வேறாக்கிக் கொடுக்கப்பட்ட நிகர இலாபத்தின் மீதியும் சர்வதேச கொடுக்கல் வாங்கலானது வியாபாரம் உழைத்த நிகர இலாபமாக கவனத்திற்கொள்ளப்படும்.

(உ) ***கொடுக்கல் வாங்கல் மீது நிகர எல்லை இலாப முறை*** :

இத்திட்டத்தின் கீழ் -

(i) இணைந்த வியாபாரம் ஒன்றுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கலிலிருந்து வியாபாரமொன்றினால் உழைக்கப்பட்ட நிகர இலாப எல்லை வியாபாரமொன்றினால் ஊழியத்துக்கு அமர்த்தும் அல்லது ஊழியத்துக்கு அமர்த்தப்படும் விற்பனைகள் அல்லது சொத்துக்கள் தொடர்பில் உரப்படும் செலவுடன் தொடர்பானதாகும். ;

(ii) தொழில் முயற்சியுடன் தொடர்பில்லாத நிறுவனத்தினால் ஒப்பிடக்கூடிய கட்டுப்பாடற்ற தொடர்பற்ற கொடுக்கல் வாங்கல் அல்லது அவ்வாறான பல கொடுக்கல் வாங்கலினால் ஏதேனும் தொழில் முயற்சியினால் உழைக்கப்பட்ட நிகர இலாப எல்லை இதன் அடிப்படையிலேயே கணக்கிடப்படும் ;

(iii) திறந்த சந்தையில் நிகர இலாப எல்லைக்கு தீவிர தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சர்வதேச கொடுக்கல் வாங்கலொன்று மற்றும் ஒப்பிடக்கூடிய கட்டுப்பாடற்ற கொடுக்கல் வாங்கலுக்கு உட்படும் வியாபாரம் ஒன்றுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் இருப்பின் அந்த வேறுபாடுகளைக் கவனத்திற்கொண்டு ஒப்பிடப்கூடிய கட்டுப்பாடற்ற கொடுக்கல் வாங்கலில் உழைக்கப்படும் இப் பந்தியின் (ii) ஆம் உப பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள மொத்த நிகர இலாப எல்லை சீராக்கப்படும் ;

(iv) இப்பந்தியின் (i) ஆம் உப பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள வியாபாரத்தினால் உழைக்கும் நிகர இலாப எல்லை இப்பந்தியின் (iii) ஆம் உப பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள நிகர இலாப எல்லைக்குச் சமமானதாக ஏற்றுக்கொள்ளப்படும் ;

(v) அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட நிகர இலாப எல்லை கொடுக்கல் வாங்கலுக்குரிய தொடர்பற்ற விலையைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும்.

எவ்வாறாயினும், தொடர்பில்லாத விலையைத் தீர்மானிக்கும்போது மிகவும் பொருத்தமான முறையாக ஒரு விலையைவிட அதிகமான அளவில் தீர்மானிக்கும் போது தொடர்பில்லாத விலையாக அந்த விலைகளில் எண் கணித இடை கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட முறையின் கீழ்த் தீர்மானிக்கப்பட்ட தொடர்பற்ற விலைக்கும் உண்மையாக அக்கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற விலைக்குமிடையிலான வித்தியாசம் 3% ஐ விடக் குறைவு எனில் உண்மையாக இடம்பெற்ற விலை தொடர்பில்லாத விலையாகக் கருதப்பட வேண்டும்.

**2. ஒழுங்குவிதி 1 இன் நோக்கங்களுக்காகக் கட்டுப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கலுடன் குறித்த கொடுக்கல் வாங்கலில் ஒப்பிடத்தக்க தன்மை பின்வரும் காரணிகளின் தொடர்பில் தீர்மானிக்கப்படும் :-**

(அ) இரண்டில் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களிலும் கைமாற்றம் செய்யப்பட்ட ஆதனமொன்றின் அல்லது சேவைகளின் குறித்த குணவியல்புகள் ;

(ஆ) சம்பந்தப்பட்ட தரப்பினர்களினால் கொடுக்கல் வாங்கலின் போது நிறைவேற்றிய விடயப் பொறுப்புகள், பயன்படுத்தப்பட்ட சொத்துகள் அல்லது பயன்படுத்தப்படும் சொத்துகள் மற்றும் ஊகிக்கப்பட்ட இடர்கள் ;

(இ) கொடுக்கல் வாங்கல்களில் தனித்தனி உரித்துடைய தரப்பினர்களிடையே பொறுப்புகள் இடர்கள் மற்றும் பயன்களை எவ்வண்ணம் பிரித்துக் கொள்வது என்பது பற்றி வெளிப்படையாக அல்லது உள்ளடக்கமாக காண்பிக்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களின் ஒப்பந்த ரீதியான நியதிகள் (அந்த நியதிகள் முறைமையானவைகளாக இருந்தாலும் சரி அல்லது எழுத்திலானவைகளாக இருந்தாலும் சரி அல்லது அவ்வாறு அல்லாதவைகளாக இருந்தாலும் சரி ;

(ஈ) உரிய தரப்பினரினால் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் வியாபாரத் தளத்தில் நிலவுகின்ற நிலைமை அதாவது பூகோள ரீதியான அமைவிடம், வியாபாரத் தளத்தின் அளவு சட்டம் மற்றும் நாட்டில் செயல்வலுவிலுள்ள ஒழுங்குவிதிகள் தொழிலாளர்களின் சந்தைகளிலுள்ள மூலதனம் மற்றும் எல்லாவற்றையும் உள்ளிட்ட பொருளாதார வளர்ச்சி, போட்டியின் அளவு மற்றும் சந்தைகள் மொத்த விற்பனைச் சந்தைகளா அல்லது சில்லறை விற்பனைச் சந்தைகளா என்பது ;

**3. கட்டுப்பாடற்ற கொடுக்கல் வாங்கலொன்றுக்கு பின்வருவன கொடுக்கல் வாங்களுடன் ஒப்பிடப்படுதல் வேண்டும் :-**

(அ) ஏதேனும் வேறுபாடுகள் இருப்பின் அந்த வேறுபாடுகளின் காரணமாக ஒப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களிடையே அல்லது குறித்த கொடுக்கல் வாங்கல் மூலம் விலை அல்லது அறவிடப்படுகின்ற செலுத்தப்படுகின்ற விலை அல்லது குறித்த கொடுக்கல் வாங்கல்களினால் திறந்த சந்தைகளில் கிடைக்கும் இலாபத்துக்கு தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்தாமலிருக்குமிடத்து ; அல்லது

(ஆ) குறித்த வேறுபாடுகள் காரணமாக ஏற்படக்கூடிய தீவிர தாக்கத்தை இல்லாமலாக்குவதற்கான காரணங்களைக் கொண்ட சரியான சீராக்கம் செய்யப்படச் சாத்தியம் காணப்படுமிடத்து கட்டுப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கலொன்றுக்கு ஒப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கலாகக் கருதப்பட வேண்டும்.

கட்டுப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கலொன்று வேறு கொடுக்கல்வாங்கலொன்றுடன் ஒப்பிடுவதற்கு பகுப்பாய்வு செய்வற்காக பயன்படுத்தப்படும் தரவுகள் குறித்த கொடுக்கல் வாங்கல் சம்பந்தப்பட்ட நிதி ஆண்டிற்குரிய தரவுகளாக இருத்தல் வேண்டும்.

எவ்வாறாயினும் ஒப்பீடு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்களில் உரித்துடைய ஒப்படைப்பு விலை தீர்மானிக்கப்படுவதற்காக உதவியளிக்கும் விடயங்களை கண்டறிந்து கொள்வதற்கு குறித்த தரவுகளினால் இயலக் கூடியதாக இருப்பின் குறித்த நிதி ஆண்டிற்கு முன்னரான இரண்டு வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு உரித்துடைய தரவுகளைப் பயன்படுத்த முடியும்.

**4. மிகவும் தகுந்த முறைமை :**

(அ) இங்கு 1 ஆம் ஒழுங்குவிதியிலுள்ள விடயங்களுக்காக மிகவும் தகுந்த முறைமையானது ஒவ்வொரு நிச்சயிக்கப்பட்ட கொடுக்கல், வாங்கல்களின் குணவியல்புகள் மற்றும் விடயங்களுக்கு நன்றாக ஒத்துப்போகக் கூடிய மற்றும் கொடுக்கல் வாங்கலுக்குரிய தொடர்பற்ற விலை மிகவும் விசுவாசமுள்ளதாக வழங்கும் முறையொன்றாகும் ;

(ஆ) மிகவும் தகுதியான முறையைத் தெரிவு செய்யும்போது பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படலாம். அவையாவன :-

(i) கொடுக்கல் வாங்கல்களின் தன்மை மற்றும் வகை ;

(ii) கொடுக்கல், வாங்கலுக்குட்படுத்தப்படும் வியாபாரத்தின் வகை அல்லது வகைகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட சொத்துகள் அல்லது பயன்படுத்துவதற்குரிய சொத்துக்கள் மற்றும் அவ்வாறான வியாபாரம் தொடர்பிலான எண்ணிப்பார்க்காத ஆபத்துக்களைக் கவனத்திற்கொண்டு நிறைவேற்றப்படும் விடயப் பொறுப்பு ;

(iii) ஏதேனும் முறையைப் பயன்படுத்தப்படுவதற்குத் தேவையான தரவுகள் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல் என்பதும் காப்பளிப்பும் நம்பிக்கையும் ;

(iv) கொடுக்கல், வாங்கல் மற்றும் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட கொடுக்கல், வாங்கலுக்கு இடையே மற்றும் அவ்வாறான கொடுக்கல், வாங்கலுக்கு முன்வரும் வியாபாரத்துக்கு இடையே நிலவும் ஒப்பிடக்கூடிய மட்டம் ;

(v) ஒப்பிடக்கூடிய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட கொடுக்கல், வாங்கல்கள் அவ்வாறான கொடுக்கல் வாங்கல்களுக்கு முன்வரும் வியாபாரமொன்றுக்கு இடையே ஏதேனும் வேறுபாடுகள் இருப்பின் அவ்வேறுபாடுகளுக்காக நம்பிக்கையாக மற்றும் சரியாக சீராக்கம் செய்யக்கூடிய வாய்ப்புகளின் அளவு ;

(vi) முறையொன்றைப் பயன்படுத்துவதற்குத் தேவையான தன்மை, அளவு என்பனவற்றை கற்பனை செய்யக்கூடிய நம்பிக்கை என்பன.

**5. (அ) சர்வதேச கொடுக்கல் வாங்கலுக்கு உட்படும் சகல தொழில் முயற்சியும் பின்வரும் தகவல்கள் மற்றும் ஆவணங்கள் (ஆங்கிலத்தில்) வைத்துக்கொள்ளப்பட்டுப் பேணப்படல் வேண்டும் :-**

(i) சாட்டுதல் பெறும் தொழில் முயற்சியின் உரிமைக் கூட்டமைப்பு தொடர்பான விபரமொன்றுக்கு உட்பட்டதாக மற்றைய தொழில் முயற்சியின் பங்குகள் மற்றும் ஏனைய உரிமைகள் பற்றிய விபரம் ;

(ii) பல்லின அல்லது கூட்டுத் தொழில் முயற்சிகள் பங்குதாரர் சாட்டுதல் பெறும் தொழில் முயற்சி கொடுக்கல், வாங்கல்களுக்கு உட்பட்ட பல்லின அல்லது கூட்டுத் தொழில் முயற்சி அமைக்கப்பெற்ற ஒவ்வொரு தொழில் முயற்சியினதும் பெயர், முகவரி, சட்டரீதியான தன்மை, வரி செலுத்தப்படும் அதற்குட்பட்ட விபரமொன்று மற்றும் அவர்களுக்கு இடையிலான உரிமைப் பொறுப்புகள் ;

(iii) சாட்டுதல் பெறுபவரின் தொழில்முயற்சி நடவடிக்கைகள் மற்றும் சாட்டுதல் பெறுபவர் தொழில்முயற்சி நடைமுறைப்படுத்தப்படும் கைத்தொழில் மற்றும் சாட்டுதல் பெறுபவர் கொடுக்கல் வாங்கல் செய்துள்ள சர்புடைய ஒரே முயற்சிகளின் வியாபாரத் தன்மை பற்றிய விரிவான விபரமொன்று ;

(iv) ஒவ்வொரு சார்புடைய வியாபாரத்துடன் உள்ளிட்ட சர்வதேச மற்றும் கூட்டு வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களின் தன்மை மற்றும் நிபந்தனைகள், வழங்கப்பட்ட சொத்துக்கள் அல்லது வழங்கிய சேவைகள் கூறப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலின் அளவு மற்றும் பெறுமதி அல்லது கூறப்பட்ட கொடுக்கல் வாங்கலின் வகை ;

(v) கொடுக்கல் வாங்கலுக்கு உட்பட்ட தொடர்புடைய வியாபாரத்தின் செயலாற்றுகை, கற்பனை செய்யப்பட்ட ஆபத்துக்கள், பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் அல்லது பயன்படுத்தப்படும் சொத்துக்கள் பற்றிய விபரமொன்று ;

(vi) சாட்டுதல் பெறுநர் கொடுக்கல், வாங்கலுக்கு உரித்துடைய தனது மொத்த வியாபாரம் மற்றும் ஒவ்வொரு உற்பத்திப் பிரிவு வேறு வேறாக உட்படுத்தக்கூடியவாறு சாட்டுதல் பெறுநரினால் தயாரிக்கப்பட்ட பொருளாதார, சம சந்தைப் பகுப்பாய்வு, தூரநோக்கு, வரவு செலவு மற்றும் ஏனைய நிதி மதிப்பீட்டு அறிக்கையொன்று ;

(vii) கொடுக்கல் வாங்கல்களின் விலையிடலுக்கு உரித்துடையதான மூன்றாம் தரப்பினருடன் ஏதேனும் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட கொடுக்கல் வாங்கலொன்றின் தன்மை, பிரிவுகள் மற்றும் நிபந்தனை அறிக்கையொன்று உட்பட்டதாக அவர்களின் ஒப்பிடக்கூடிய தன்மையை பகுப்பாய்வு செய்வதற்கு உதவும் கட்டுப்பாடற்ற கொடுக்கல் வாங்கல்களின் அறிக்கையொன்று ;

(viii) உரித்துடைய கொடுக்கல், வாங்கலுடன் கட்டுப்பாடற்ற கொடுக்கல் வாங்கல்களில் ஒப்பிடக்கூடிய தன்மையைக் காட்டுவதற்கான செய்யப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையொன்று ;

(ix) ஒவ்வொரு கொடுக்கல், வாங்கல் அல்லது கொடுக்கல் வாங்கலின் வகைக்குரியதாக தொடர்பற்ற விலையைத் தீர்மானிப்பதற்காக கவனத்திற்கொள்ளப்படும் மற்றும் மிகவும் தகுதியானதெனத் தெரிவு செய்யப்பட்ட சான்றுப்படுத்தக்கூடிய விடயங்கள் கொண்டதாக மற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கேற்ப அது பயன்படுத்தப்பட்ட முறை பற்றிய விபரமொன்று ;

(x) மிகவும் தகுதியான முறையைப் பயன்படுத்துவதற்காக ஒப்பிடக்கூடியவாறான தரவுகள் மற்றும் நிதித்தகவல்கள் உள்ளாக்கப்பட்டு தொடர்பற்ற விலையைத் தீர்மானிப்பதற்காக நிறைவேற்றப்பட்டுள்ள வேலைப்பகுதி பற்றிய அறிக்கையொன்று மற்றும் கொடுக்கல், வாங்கல் மற்றும் ஒப்பிடக்கூடியவாறான கட்டுப்பாடற்ற கொடுக்கல் வாங்கலுக்கு இடையே அல்லது அவ்வாறான கொடுக்கல், வாங்கல்களுக்கு உள்ளாகும் வியாபாரங்களில் ஏதேனும் வேறுபாடுகள் இருப்பின் அதற்குச் செய்யப்பட்ட சீராக்கங்கள் ;

(xi) தொடர்பற்ற விலைகள் தீர்மானிக்கும்போது தீர்மானமாகத் தாக்கத்தை உள்ளடக்கிய விடயங்கள், கற்பனைகள், கொள்கைகள் மற்றும் விலை பேரம் பேசுதல் ;

(xii) இந்த நியதிகளின் கீழ் தீர்மானிக்கப்பட்ட தொடர்பற்ற விலை, சமநிலைக்குக் கொண்டு வருவதற்காக ஏதேனும் சீராக்கம் செய்ய வேண்டி இருந்திருப்பின் வழங்கும் விலைக்குச் செய்யப்பட்ட சீராக்கம் பற்றிய விவரம் மற்றும் வரி விடயங்களுக்காக மொத்த வருமானத்துக்குப் பின்னர் செய்யப்பட்ட சீராக்கம் ;

(xiii) தொடர்பற்ற விலையைத் தீர்மானிப்பதற்காக உரித்துடையதாகக் கூடிய சார்புடைய வியாபாரத்தின் தகவல்கள் மற்றும் தரவுகள் உள்ளடக்கிய வேறு ஏதேனும் தகவல்கள், தரவுகள் அல்லது ஆவணங்கள்.

(ஆ) சாட்டுதல் பெறுநர் ஏனைய தொடர்புடைய தொழில் முயற்சிகளுடன் உள்ளடக்கிய கொடுக்கல், வாங்கல்களில் கணக்குப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தப் பெறுமதி ரூ. 100 மில்லியனை விஞ்சாதெனின் மேலே (அ) ஆம் உப பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ள எதுவும் உரித்துடையதாகாது.

அவ்வாறாயினும் சாட்டுதல் பெறுவோரிடமுள்ள ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு அவர் உட்பட்ட கொடுக்கல் வாங்கல் மேற்குறிப்பிட்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 104 (3) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கு வைக்கப்பட்டுள்ளது என்பது பற்றி உறுதிப்படுத்துதல் அவசியமாகும்.

(இ) உரித்துடைய ஆவணங்கள் மேலே காண்பிக்கப்பட்ட நம்பிக்கையான ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும் ;

(i) உத்தியோகபூர்வ வெளியீடுகள், அறிக்கைகள், கற்கைகள் மற்றும் இணைந்த வியாபாரங்களின் வதிவிட நாட்டு அரசாங்கத்திலிருந்து பெறப்பட்ட தரவுத் தளங்கள் ;

(ii) மேற்கொள்ளப்பட்ட சந்தை ஆய்வு கற்கைகளின் அறிக்கைகள் மற்றும் சர்வதேச அல்லது தேசிய நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட தொழில்நுட்ப வெளியீடுகள் ;

(iii) பங்குப் பரிவர்த்தனை மற்றும் சரக்கு பொருள் சந்தை விலைகோரல்கள் உள்ளடங்கலாக விலை வெளியீடுகள் ;

(iv) இணைந்த வியாபாரங்களின் வர்த்தகத்துடன் தொடர்பான வெளியிடப்பட்ட கணக்குகள் மற்றும் நிதிக் கூற்றுக்கள் ;

(v) இணைந்த வியாபாரத்துடன் அல்லது கொடுக்கல், வாங்கலை ஒத்த ஒரேவகையான கொடுக்கல் வாங்கல் தொடர்பில் தொடர்புபடாத தொழில்முயற்சிகள் என்பவற்றுடனான உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களும் ;

(vi) மதிப்பீட்டாளர் அத்துடன் இணைந்த வியாபாரங்குக்குகிடையில் பேரம் பேசப்பட்ட நிபந்தனைகள் தொடர்பான தொடர்பாடல்கள் மற்றும் கடிதங்கள் ;

(vii) பின்பற்றப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் பல்வேறுபட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் சாதாரணமாக வெளியிடப்பட்ட ஆவணங்கள் ;

(ஈ) ஒரு வருடத்திற்கு முன்னைய வரி மதிப்பாண்டில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய சர்வதேச கொடுக்கல் வாங்கலொன்று தொடர்ந்து மேற்கொள்ளப்படும் பொழுது, முன்னைய வரி மதிப்பாண்டு ஒவ்வொன்று தொடர்பிலும் புதிய ஆவணங்கள் தனியாகப் பராமரிக்கப்படுதல் வேண்டும். சர்வதேச கொடுக்கல் வாங்கல்கள் இயல்பு அல்லது நியதிகளில் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படாதவிடத்து, மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் அல்லது ஒப்படைப்பு விலையிடலில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய வேறு ஏதேனும் காரணிகள், அத்தகைய குறிப்பிடத்தக்க மாற்றத்தினைப் பொறுத்த வரை இதன் கீழ் அவசியமானதாக இருக்கக்கூடிய புதிய ஆவணங்கள் சர்வதேச கொடுக்கல் வாங்கலின் விலையிடலில் மாற்றத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் பேணப்படுதல் வேண்டும் ;

(உ) குறித்த வரி மதிப்பீடு வருட முடிவிலிருந்து ஐந்து வருட காலப்பகுதியொன்றுக்குப் பாதுகாக்கப்படுவதுடன் பேணப்படுதல் வேண்டும் ;

6. ***முற்பண விலையிடல் உடன்படிக்கைகள்.***- மாற்றல் விலையிடல் விவகாரங்களைத் தீர்ப்பதற்கான பூர்வீக நிருவாகம், நீதித்துறை மற்றும் பொறுத்தனைச் செயன்முறை என்பவற்றுக்கு குறைநிரப்பும் வகையில் நிலையான காலப்பகுதியொன்றுக்கு கொடுக்கல்வாங்கல் செய்வதற்கான மாற்றல் விலையிடலினை தீர்மானிப்பதற்காக கட்டுப்பாட்டு கொடுக்கல்வாங்கல்களுக்கு (உ+ம் முறைமை, அதற்குப்பொருத்தமான சீராக்கல்கள் மற்றும் எதிர்கால நிகழ்வுகளுக்கு முக்கிய ஊகங்கள்) பொருத்தமான காரணிகளுடன் இணங்கும் வகையில் முற்பண விலையிடல் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான ஏற்பாடுகள் அடிப்படையில் பின்வரும் இரண்டு வகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

(அ) ***ஒருதலைப்பட்ச ஏற்பாடுகள்.***- பிற வரி நியாயாதிக்கத்தில் இணைந்த வியாபாரங்களின் வரி பொறுப்புடமையினை பாதிக்கக்கூடியதாக இருப்பினும் பிற ஆர்வ வரி நிர்வாகங்களின் ஈடுபாடின்றி ஏற்பாடொன்றினை வரி நிருவாகமும் வரி செலுத்துநரும் தாபிப்பதற்கு ஏற்பாடொன்று காணப்படுகின்றது.

(ஆ) ***இருதலைப்பட்ச ஏற்பாடுகள் .***- மாற்றல் விலையிடல் முறைமையினை ஏற்றுக்கொள்வதற்கு இரண்டு அல்லது அதிகமான கம்பனிகள் இணங்கிக் கொள்வதற்கு ஏற்பாடொன்று காணப்படுகின்றது. இருதலைப்பட்ச அல்லது பல்தரப்பு பிரயோகமானது அனைத்து வரி நிர்வாகங்கள் மற்றும் வரி செலுத்துநர்கள் நியாயாமானதாகக் கருதப்படுவதுடன் வரி செலுத்துநர் அக்கறைக்கு உறுதியான ஸ்திரப்பாட்டினை வழங்குகின்றது.

7. ***இணைந்த வியாபாரங்கள் [பிரிவு 104 (4) ].***- மேற்குறிப்பிடப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 104 (4) ஆம் பிரிவின் நோக்கங்களுக்கு அமைவாகவும் இரண்டு ஒழுங்குவிதிகளின்படியும் இரண்டு வியாபாரங்கள் இணைந்த வியாபாரங்களாக கருதப்பட முடியும் முன்னைய வருடத்தின் போது எந்த நேரத்திலும்,

(அ) ஏனைய வியாபாரத்திலும் வாக்களிக்கும் அதிகாரத்தில் ஐம்பது சதத்திற்குக் குறையாத பங்குகளை நேரடியாக அல்லது மறைமுகமாக வைத்திருக்கும் தொழில் முயற்சியொன்று அல்லது ;

(ஆ) அத்தகைய ஒவ்வொரு வியாபாரத்திலும் வாக்களிக்கும் அதிகாரத்தில் ஐம்பது சதத்திற்குக் குறையாத பங்குகளை நேரடியாக அல்லது மறைமுகமாக வைத்திருக்கும் எவராவது ஒரு ஆள் அல்லது ஒரு வியாபாரம் அல்லது ;

(இ) மற்றுமொரு வியாபாரத்தின் மொத்த சொத்துக்களின் புத்தக பெறுமதியின் ஐம்பத்தியொரு சதவீதத்திற்குக் குறையாததாக உருவாக்கப்பட்ட மற்றுமொரு வியாபாரத்திற்கு இன்னுமொரு வியாபாரத்தினால் வழங்கப்பட்ட முற்பணக் கடன்கள் அல்லது ;

(ஈ) மற்றுமொரு வியாபாரத்தின் மொத்த பெறுகைகளின் இருபத்தைந்து சதவீதத்திற்குக் குறையாத உத்தரவாதத்தையுடைய வியாபாரமொன்று ; அல்லது

(உ) வியாபாரமொன்றின் ஆளுநர் சபையின் நிறைவேற்று உறுப்பினர்கள் அல்லது பணிப்பாளர் ஒருவர் அல்லது பல பணிப்பாளர்கள் அல்லது ஆளுநர் சபையின் உறுப்பினர்கள் அல்லது அரைவாசிக்கு மேற்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றுமொரு வியாபாரத்தினால் நியமிக்கப்படுதல் ;அல்லது

(ஊ) இரண்டு வியாபாரங்களின் ஆளுநர் சபை நிறைவேற்று உறுப்பினர்கள் அல்லது பணிப்பாளர் ஒருவர் அல்லது பல பணிப்பாளர்கள் அல்லது அரைவாசிக்கு மேற்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் அதே நபரினால் அல்லது நபர்களினால் நியமிக்கப்படுதல் ; அல்லது

(எ) மற்றைய வியாபாரம் உரித்தைக் கொண்டுள்ள அல்லது மற்றைய வியாபாரம் இது தொடர்பான பிரத்தியேகமான உரிமைகளைக் கொண்டுள்ள போது உற்பத்தி அல்லது பொருட்களின் பதிலிடுதல் அல்லது வியாபாரமொன்று அது மாத்திரமே அதனை எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றி முழுமையாக அறிந்துள்ள வியாபாரம் அல்லது ஒரே தன்மையுள்ள வேறேதேனும் வியாபாரங்கள் அல்லது வர்த்தக உரிமைகள் அல்லது ஏதேனும் தரவுகள், ஆவணங்கள் சித்திரங்கள் அல்லது வடிவமொன்று தொடர்பான மாதிரிகள் கண்டுபிடிப்புகள், மாதிரி, வடிவமைப்பு, இரகசிய வாய்ப்பாடுகள், செயன்முறைகள் ; அல்லது

(ஏ) வியாபாரமொன்றினால் மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகள் பண்டங்களின் உற்பத்தி அல்லது செயன்முறைகளுக்கான மூலப்பொருட்கள் மற்றும் தேவையான பாவனைப்பொருட்களின் தொண்ணூறு வீதம் அல்லது அதற்கு அதிகமானவை மற்றுமொறு வியாபாரமொன்றினால் அல்லது மற்றொரு வியாபாரத்தினால் குறிப்பீடு செய்யப்பட்ட நபர்களினால் மற்றும் விநியோகத்துடன் தொடர்பான பிற நிபந்தனைகள் அத்தகைய பிற வியாபாரங்களினால் செல்வாக்கு செலுத்தியுள்ளது ; அல்லது

(ஐ) தனியாள் ஒருவரினால் அல்லது அவரது உறவினரினால் அல்லது அத்தகைய தனியாள் மற்றும் அவரது உறவினர் இருவரும் இணைந்து தொழில் முயற்சி ஒன்றினைக் கட்டுப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அத்தகைய தனியாள் அல்லது அவரது உறவினரினால் கட்டுப்படுத்தப்பட்ட மற்றுமொரு தொழில் முயற்சி ; அல்லது

(ஒ) தொழில் முயற்சியொன்று நிறுவனமொன்றாக, ஆட்களின் கட்டமைப்பாக அல்லது தனிப்பட்டவர்களின் குழுமமொன்றாக இருந்து அத்தகைய நிறுவனங்கள் ஆட்களின் கட்டமைப்புகள் அல்லது தனியாட்களின் குழுமமொன்றின் பத்து சதவீதத்திற்குக் குறையாத வட்டியினைக் கொண்டுள்ள பிற தொழில் முயற்சிகள் ; அல்லது

(ஓ) குறித்துரைக்கப்படும் வகையில் இரண்டு தொழில் முயற்சிகளுக்கிடையில் காணப்படும் ஏதேனும் பரஸ்பர அக்கறை.

8. **ஒப்படைப்பு விலையிடல் உத்தியோகத்தர்** .- ஒப்படைப்பு விலையிடல் உத்தியோகத்தர் தனது கடமைகளை மேற்கொள்ளும் போது ஏற்புடையதாகும் நடைமுறைகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

(அ) எவரேனும் ஒரு ஆள், மதிப்பீட்டுக்கு முன்னர் ஏதேனும் சர்வதேச கொடுக்கல் வாங்கலில் நுழைந்திருந்து, அவ்வாறு மதிப்பீடு செய்வது அவசியமானது அல்லது பொருத்தமற்றது என வரி மதிப்பீட்டாளர் கருதுவராயின், அவர் பிரதி ஆணையாளரின் முன்கூட்டிப் பெறப்பட்ட அனுமதியுடன் மேலே குறிப்பிடப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் உப பிரிவு (2) இன் கீழ் குறித்த சர்வதேச கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலைக் கணிப்பீடு தொடர்பாக ஒப்படைப்பு விலையிடல் உத்தியோகத்தரிடம் உசாவுதல் வேண்டும் ;

(ஆ) மேலே பந்தி (அ) இல் உள்ளவாறு உசாவப்படுமிடத்து, ஒப்படைப்பு விலையிடல் உத்தியோகத்தர் 104 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சர்வதேச கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைக் கணப்பீடு செய்தற்குத் தனக்கு உதவியாக அமைந்த ஏதாவது சான்றுகள் இருப்பின் அவற்றைச் சமர்ப்பிக்குமாறு அல்லது சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அத்தகைய ஆளுக்கு அறிவித்தல் ஒன்றை அனுப்புவார் ;

(இ) மேலே (ஆ) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு, அத்தகைய ஆள் சமர்ப்பிக்கக்கூடிய 5 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தகவல்கள் அல்லது ஆவணங்கள் உள்ளிட்ட சான்றுகளை விசாரித்து அத்தகைய சான்றுகளைக் கவனத்தில் எடுத்து சேகரித்து தகவல்களின் அடிப்படையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிலைகளில் தான் சேகரித்த அனைத்துத் தகவல்களையும் கவனத்தில் எடுத்து எழுத்து மூலம் 104 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவிற்கு இணங்க சர்வதேச கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையினைத் தீர்மானித்து தனது கட்டளையின் பிரதியொன்றை அத்தகைய ஆளுக்கு அனுப்புதல் வேண்டும்.

எவ்வாறாயினும், அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்ட திகதி மற்றும் நேரம் மீது அத்தகைய ஆளினை அழைக்கும் அறிவித்தல் ஒப்படைப்பு விலையிடல் அலுவலினால் வழங்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்று வழங்கப்படுதல் வேண்டும். அதில் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையானது, ஒப்படைப்பு விலையிடல் அலுவலரினால் வைத்துக் கொள்ளப்பட்ட பொருட்களை அல்லது தகவலை அல்லது ஆதனத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் ;

(ஈ) (இ) ஆம் அத்தியாயத்தின் கீழ் கட்டளை கிடைக்கப்பட்டதிலிருந்து வரிமதிப்பீட்டாளர் 104 ஆம் பிரிவின் (2) ஆம் உபபிரிவின் கீழ் அத்தகைய ஆளின் மொத்த வருமானக் கணிப்பீட்டினை, ஒப்படைப்பு விலையிடல் அலுவலரினால் உப பிரிவின் கீழ் தீர்மானிக்கப்பட்ட கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையினைக் கொண்டிருத்தல் ;

(உ) பதிவில் ஏற்படக்கூடிய ஏதேனும் தவறுகளை திருத்தும் நோக்கத்துடன், ஒப்படைப்பு விலையிடல் அலுவலரினால் (3) ஆம் உப பந்தியின் கீழ் அவரினால் வழங்கப்பட்ட ஏதேனும் கட்டளையினைத் திருத்த முடியும் என்பதுடன், 163 ஆவது பிரிவின் ஏற்பாடுகள் இதற்கமைவாக ஏற்புடையதாகுதல் வேண்டும்.

(ஊ) மேலே (உ) பந்தியின் கீழ் ஒப்படைப்பு விலையிடல் அலுவலரினால், ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் அவர் மதிப்பீட்டலுவலருக்கு அவரது கட்டளையின் பிரதியொன்றினை அனுப்புதல் வேண்டும் என்பதுடன் பின்னர், அவர், ஒப்படைப்பு விலையிடல் அலுவலரின் அத்தகைய கட்டளையின் இணக்கப்பாட்டுடன் மதிப்பீட்டுக் கட்டளைக்கு திருத்தம் மேற்கொள்வார்.

**9. பணிப்பாளர் அறிக்கையில் வெளிப்படுத்தல்கள்**

பணிப்பாளர்களின் அறிக்கையானது, ஒப்படைப்பு விலையிடல் தொடர்பான பின்வரும் வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 107 (2) (அ) பிரிவின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட படிவத்தில் வியாபாரங்களுடன் இடம்பெற்றுள்ள கொடுக்கல் வாங்கல்களின் அறிக்கை.

- நடைமுறையில் இருக்கும்வாறான 107 (2) (அ) பிரிவின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட படிவத்திற்கு மிக நெருக்கமான வகையில் படிவமொன்றில் ஒப்படைப்பு விலையிடலைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் உபாயங்கள் மற்றும் கொள்கைகளை குறிப்பீடு செய்யும் ஒப்படைப்பு விலையிடல் கொள்கைக் கூற்று.

- இதனோடு தொடர்பான முகாமைத்துவ ஆபத்துக் காரணிகளும் பிறவும் ;

- ஐந்தொகை திகதியிலுள்ளவாறு அத்தகைய திறந்தவர்களிடமிருந்து உரிய அறவிட முடியாத கடன்களுக்கான மீதிகள் மற்றும் ஏற்பாடுகளில் தொடர்புடைய திறந்தவர்கள் பற்றிய நிலுவை விடயங்கள் தொடர்பான தொகை அல்லது உரிய பங்குகள்.

- நிதிக்கூற்றுகளினை விளங்கிக் கொள்வதற்கு அவசியமான தொடர்புடைய திறத்தவர் கொடுக்கல் வாங்கல் பற்றிய ஏதேனும் ஏனைய தகவல் அல்லது ஏதேனும் பிற சட்டம் அல்லது ஏதேனும் கணக்கீட்டு தராதரங்களின் கீழ் வெளிப்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்படும் ஏதேனும் தகவல் இந்த வழிகாட்டல்களின் கீழ் தேவையான வெளிப்படுத்தல்கள் அதே போன்று மிகவும் அர்த்தமுடையதாகவும் விளங்கிக் கொள்வதற்கு இலகுவாக இருக்கக்கூடிய வகையில் ஆண்டறிக்கையுடன் வெளிப்படக்கூடிய ஏதேனும் சட்டங்களின் கீழ் வெளிப்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்பட்ட அல்லது கணக்கீட்டு தராதரங்களின் கீழான வெளிப்படுத்தல்கள்.

**10. ஒப்படைப்பு விலையிடல் ஒழுங்குவிதிகள் மீதான பணிப்பாளர் பிரதான அலுவலரின் சான்றிதழ் :**

அங்கத்தவர்களுக்கான பணிப்பாளர்களின் அறிக்கை பின்வரும் வடிவமைப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அங்கத்தவர்களுக்கு,

கம்பனியானது, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட ஒப்படைப்பு விலையிடலில் ஒழுங்கு விதிகளுடன் இணங்கியொழுகுகிறது என்பது சான்றுபடுத்தப்படுகின்றது. இந்த ஒழுங்குவிதிகளின் தொடர்பான தகவல் குறித்த சட்டத்தின் 107 (2) (அ) ஆம் பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழின் கீழ் வழங்கப்பட்டதாகும்.

........................................... இலிருந்து ............................... வரையான காலப்பகுதியின் போது தொடர்புடைய திறத்தவர்களுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் கம்பனியின் அக்கறைக்கு எவ்விதத்திலும் பாதிப்பில்லாது கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையில் பதிவு செய்யப்பட்டிருக்குமென்பதை நாம் நம்புகின்றோம். இக் கொடுக்கல் வாங்கல்கள் கம்பனியினால் பின்பற்றப்பட்ட ஒப்படைப்பு விலையிடல் கொள்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகும். அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் கணக்காய்வுக்காக சுயாதீனமான கணக்காய்வாளர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் கணக்காய்வு மீதான அவர்களது அறிக்கை தொடர்பில் எவ்வித (மோசமான குறிப்புகளும் மேற்கொள்ளப்படவில்லை) / (கணக்காய்வாளர் அவர்களது அறிக்கை தொடர்பில் தகைமை பெற்றுள்ளதுடன் குறித்த கணக்காய்வு அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது)

* இடம் :

பணிப்பாளர் சபைக்காக.

* ஏற்புடையதல்லாதவற்றை நீக்கிவிடவும்.

## பகுதி II

**ஒப்படைப்பு விலையிடல் ஒழுங்குவிதிகள் (சர்வதேச கொடுக்கல் வாங்கல்களைத் தவிர).**

**11. பகுதி** I, இன் கீழ் 1, 2, 3, 4 மற்றும் 7 ஆம் ஒழுங்குவிதிகள் சர்வதேச கொடுக்கல் வாங்கல்களைத் தவிர ஒப்படைப்பு விலையிடல் என ஏற்புடையதாகுதல் வேண்டும் என்பதுடன், பின்வரும் சொற்களையும் எண்களையும் பதிலிடுவதன் மூலம் திருத்தப்படலாம். அப்பகுதியில் காணப்படும் "பிரிவு 104 (3)" மற்றும் "பிரிவு 104 (4)" என்ற சொற்களும் எண்களும் முறையே "பிரிவு 104 அ (3)" மற்றும் "பிரிவு 104 அ (4)" என்பவற்றினால் பதிலீடு செய்யப்படும்.

12. (அ) இணைந்த தொழில் முயற்சிகளுடன் கொடுக்கல் வாங்கலில் நுழையும் ஒவ்வொரு தொழில் முயற்சியும் பின்வரும் தகவல்களையும் ஆவணங்களையும் இலங்கையில் (ஆங்கில மொழியில்) பேணிப் பாதுகாத்துவருதல் வேண்டும்.

(i) மதிப்பீட்டுக்கு உட்படும் தொழில் முயற்சியின் உரிமைக் கட்டமைப்பு தொடர்பான விபரங்கள் உள்ளிட்ட அதன் மற்றைய தொழில் முயற்சிக்குரிய பங்குகள் மற்றும் வேறு உரிமைகள் தொடர்பான விவரம் ;

(ii) பல்தேசிய அல்லது கூட்டுத்தொழில் முயற்சியின் பங்காளியான மதிப்பீட்டுக்கு உட்படும் தொழில் முயற்சி கொடுக்கல் வாங்கலில் நுழைந்த பல்தேசிய அல்லது கூட்டுத் தொழில் முயற்சியில் உள்ளடங்கும் தொழில் முயற்சியின் பெயர், முகவரி, சட்ட அந்தஸ்து, வரிநோக்கங்களுக்காக வதியுனராகக் கருதப்படும் நாடு ஆகிய விடயங்கள் விவரங்களும் அவர்களுக்கிடையில் காணப்படும் உரிமைக் கடப்பாடுகள் ;

(iii) மதிப்பீட்டுக்குட்படுபவரின் வியாபாரச் செயற்பாடுகள் அச் செயற்பாடுகளை தொழிற்படுத்தும் தொழிற்துறை, அவ்வாறு மதிப்பீட்டுக்குட்படுபவர் கொடுக்கல், வாங்கல் செய்துள்ள வியாபாரங்களின் தன்மை தொடர்பான விரிவான விபரங்கள் ;

(iv) தொடர்புடைய தொழில் முயற்சிகளுடன் நுழைந்துள்ள சர்வதேச அல்லது கூட்டு வியாபாரத்தின் கொடுக்கல் வாங்கல்களின் தன்மை மற்றும் நிபந்தனைகள் (விலை அடங்கலாக) ஒப்படைக்கப்பட்ட ஆதனங்கள் அல்லது வழங்கிய சேவைகள் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட அளவு பெறுமதி அல்லது அக்கொடுக்கல் வாங்கலின் வகை ;

(v) மதிப்பீட்டுக்குட்படும் ஆள் அல்லது கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் தொடர்பு உடைய தொழில் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டிய செயலாற்றுகை தாங்கிக் கொள்ள வேண்டிய இழப்பு அபாயங்கள், பயன்படுத்திய சொத்துக்கள் அல்லது பயன்படுத்தப்படும் ஆதனங்கள் தொடர்பான விவரங்கள்.

(vi) மதிப்பீட்டுக்கு உட்படும் ஆள் நுழையும் கொடுக்கல் வாங்கல் நிகழத்தக்க முழு வியாபாரமும் ஒவ்வொரு உற்பத்திப் பிரிவும் தனித்தனியாக உள்ளடங்கும் வித்தில் மதிப்பீட்டுக்கு உட்படுபவரினால் தயாரிக்கப்பட்ட பொருளாதார மற்றும் சந்தைப் பகுப்பாய்வு, மதிப்பீடு வரவு செலவுத் திட்டம் மற்றும் ஏனைய நிதி மதிப்பீடுகள் அடங்கிய அறிக்கையொன்று ;

(vii) கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புபட முடியுமான மூன்றாந் தரப்பாகவுள்ள ஏதேனும் கட்டுப்பாடுகளுக்குப் புறம்பாக கொடுக்கல் வாங்கலின் தன்மை சட்டங்கள், நிபந்தனைகளின் அறிக்கையொன்று உள்ளிட்ட அவர்களின் ஒப்பீடு செய்யக்கூடிய தன்மைக்கு உதவியாக அமையக்கூடிய கட்டுப்பாடற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கையொன்று ;

(viii) குறித்த கொடுக்கல் வாங்கலுடன் கட்டுப்பாடற்ற முறையில் கொடுக்கல் வாங்கல் ஒப்பிடும தன்மையை மதிப்பீடு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையொன்று ;

(ix) ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுடனும் அல்லது கொடுக்கல் வாங்கலின் வகையுடன் தொடர்பற்ற விலையைத் தீர்மானிப்பதற்காகக் கவனத்திற் கொள்ளப்பட்ட முறைகள், நியாயமான காரணங்கள் உள்ளிட்டதாக தெரிவு செய்த முறைகள், ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் அம்முறைகள் பயன்படுத்தப்பட்ட வழிமுறை தொடர்பான விவரங்கள்.

(x) மிகவும் பொருத்தமான முறையைத் தீர்மானிப்பதற்காகப் பயன்படுத்திய ஒப்பீட்டுத் தரவுகள் மற்றும் தகவல்கள் உள்ளிட்ட தொடர்பற்ற விலையைத் தீர்மானிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்றும், கொடுக்கல் வாங்கலுக்கும் ஒப்பீடு செய்ய முடியுமான கட்டுப்பாடற்ற கொடுக்கல் வாங்கலுக்கும் இடையில் அல்லது அத்தகைய கொடுக்கல் வாங்கல்களில் நுழையும் தொழில் முயற்சிகளில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் அது தொடர்பில் செய்யப்படும் செம்மையாக்கங்கள் ;

(xi) தொடர்பற்ற விலையைத் தீர்மானிக்கும் போது முக்கியமாகச் செல்வாக்குச் செலுத்திய எடுகோள்கள், கொள்கைகள், விலை தொடர்பான விட்டுக் கொடுப்புக்கள் ;

(xii) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் தீர்மானித்து தொடர்பற்ற விலையுடன் சமநிலைக்கு கொண்டு வரவேண்டியதாக இருந்திருப்பின் ஒப்படைப்பு விலையில் செய்யப்பட்ட செம்மையாக்கள் தொடர்பான விவரமும் அதனடிப்படையில் வரி நோக்கங்களுக்காக மொத்த வருமானத்தில் செய்யப்பட்ட செம்மையாக்கங்களும்.

(xiii) தொடர்பற்ற விலையைத் தீர்மானிப்பதுடன் தொடர்புபடக்கூடிய தொழில் முயற்சி தொடர்பான தகவல்கள், தரவுகள் அல்லது ஆவணங்கள் உள்ளிட்ட ஏதேனும் தகவல்கள், தரவுகள் அல்லது ஆவணங்கள்.

(ஆ) எவரேனும் ஒரு ஆள் தொடர்புடைய வேறு தொழில் முயற்சியொன்றுடன் செய்த கொடுக்கல் வாங்கல்களின் கணக்குப் புத்தகங்களில் உள்ளடங்கியுள்ள எந்தவொரு மதிப்பீட்டு வருடத்திற்குமான மொத்தப் பெறுமதி 50 மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்து மேலே பந்தி (அ) இல் கூறப்பட்ட எந்தவொன்றும் ஏற்புடையதாக மாட்டாது.

எவ்வாறாயினும், மதிப்பீட்டுக்குள்ளாகும் ஆளிடம் காணப்படும் ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் குறிப்பிட்ட உள்நாட்டு இறை வரிச் சட்டத்தின் 104 (அ) (3) ஆம் உறுப்புரைக்கு இணங்க கணக்கீடு செய்யப்பட்டிருப்பதற்கு உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

(இ) உரிய தகவல்கள் விசுவாசமான ஆவணங்களின் ஊடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும். பின்வரும் ஆவணங்கள் அதில் உள்ளடங்கும்.

(i) தொடர்புடைய தொழில் முயற்சி பதியுனராகவுள்ள நாட்டின் அல்லது வேறு ஒரு நாட்டின் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ வெளியீடுகள், அறிக்கைகள், ஆய்வுகள் மற்றும் தரவுகள் ;

(ii) மேற்கொள்ளப்பட்டுள்ள சந்தை ஆய்வுகள் தொடர்பான அறிக்கைகள் மற்றும் உள்நாட்டில் அல்லது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப வெளியீடுகள் ;

(iii) தொகைப் பரிமாற்ற மற்றும் பொருட் சந்தை விலை உள்ளிட்ட விலை தொடர்பான வெளியீடுகள் ;

(iv) தொடர்புடைய கம்பனியின் வர்த்தகச் செயற்பாடுகளுக்கான கணக்குகளும் நிதிக்கூற்றுக்களும் ;

(v) அக்கொடுக்கல் வாங்கல்களுக்குச் சமமான கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய தொடர்புடைய தொழில் முயற்சியுடன் அல்லது தொடர்பற்ற தொழில் முயற்சிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களும் ஒப்பந்த உடன் நடவடிக்கைகளும் ;

(vi) மதிப்பீட்டுக்கு உட்படுபவரும் தொடர்புடைய தொழில் முயற்சியும் உடன்பட்ட நிபந்தனைகள் தொடர்பான ஆவணங்களும் ஏனைய கடிதப் பரிமாற்றங்களும் ;

(vii) பின் பற்றும் கணக்கீட்டுக் கொள்கைக்கு இணங்க பல்வேறு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் பொதுவாக வழங்கப்படும் ஆவணங்கள்.

(ஈ) மதிப்பீட்டுக்கு முன்னரான ஒன்றுக்கு மேற்பட்ட வருடங்கள் தொடர்பில் தாக்கம் செலுத்தும் விதத்தில் சர்வதேச கொடுக்கல் வாங்கல்கள் தொடர்ச்சியாக நடைபெறுமிடத்து சர்வதேச கொடுக்கல் வாங்கலுக்குரிய தன்மையில் அல்லது நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் எடுகோள்களின் அல்லது ஏதேனும் வேறு காரணிகள் ஒப்படைப்பு விலையில் தாக்கத்தினை ஏற்படுத்த முடியுமென்பதுடன் அத்தகைய குறிப்பிடத்தக்க மாற்றத்தில் இந்த ஒழுங்கு விதியின் கீழ் அவசியப்படுமாறான, புதிய ஆவணப்படுத்தல் இணைந்த தொழில் முயற்சிகளுக்கிடையில் கொடுக்கல் வாங்கலுக்குரிய விலையிடல் மாற்றத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் பேணப்படுதல் வேண்டும்.

(உ) இந்த ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல் மற்றும் ஆவணங்கள், குறிப்பிட்ட வரி மதிப்பீட்டு ஆண்டின், இறுதியிலிருந்து ஐந்து வருட காலப்பகுதிக்கு பேணப்பட்டு பராமரிக்கப்படுதல் வேண்டும்.

13. **இணைந்த வியாபாரங்கள் [பிரிவு 104 அ (4)]** .- மேற்குறிப்பிடப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 104 அ (4) ஆம் பிரிவின் நோக்கங்களுக்கு அமைவாகவும் இரண்டு ஒழுங்குவிதிகளின்படியும் இரண்டு வியாபாரங்கள் இணைந்த வியாபாரங்களாகக் கருதப்பட முடியும் முன்னைய வருடத்தின்போது எந்த நேரத்திலும்,

(அ) அத்தகைய ஒவ்வொரு வியாபாரத்திலும் வாக்களிக்கும் அதிகாரத்தில் ஐம்பது சதத்திற்குக் குறையாத பங்குகளை நேரடியாக அல்லது மறைமுகமாக வைத்திருக்கும் தொழில் முயற்சியொன்று ;அல்லது

(ஆ) அத்தகைய ஒவ்வொரு வியாபாரத்திலும் வாக்களிக்கும் அதிகாரத்தில் ஐம்பது சதத்திற்குக் குறையாத பங்குகளை நேரடியாக அல்லது மறைமுகமாக வைத்திருக்கும் எவராவது ஒரு ஆள் அல்லது ஒரு வியாபாரம் ; அல்லது

(இ) மற்றுமொரு வியாபாரத்தின் மொத்த சொத்துக்களின் புத்தகப் பெறுமதியின் ஐம்பத்தியொரு சதவீதத்திற்குக் குறையாததாக உருவாக்கப்பட்ட மற்றுமொரு வியாபாரத்திற்கு இன்னுமொரு வியாபாரத்தினால் வழங்கப்பட்ட முற்பணக் கடன்கள் ; அல்லது

(ஈ) மற்றுமொரு வியாபாரத்தின் மொத்த பெறுகைகளின் இருபத்தைந்து சதவீதத்திற்குக் குறையாத உத்தரவாதத்தையுடைய வியாபாரமொன்று ; அல்லது

(உ) வியாபாரமொன்றின் ஆளுநர்சபையின் நிறைவேற்று உறுப்பினர்கள் அல்லது பணிப்பாளர் ஒருவர் அல்லது பல பணிப்பாளர்கள் அல்லது ஆளுநர் சபையின் உறுப்பினர்கள் அல்லது அரைவாசிக்கு மேற்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றுமொரு வியாபாரத்தினால் நியமிக்கப்படுதல் ; அல்லது

(ஊ) இரண்டு வியாபாரங்களின் ஆளுநர் சபை நிறைவேற்று உறுப்பினர்கள் அல்லது பணிப்பாளர் ஒருவர் அல்லது பல பணிப்பாளர்கள் அல்லது அரைவாசிக்கு மேற்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் அதே நபரினால் அல்லது நபர்களினால் நியமிக்கப்படுதல் ; அல்லது

(எ) மற்றைய வியாபாரம் உரித்தைக் கொண்டுள்ள அல்லது மற்றைய வியாபாரம் இது தொடர்பான பிரத்தியேகமான உரிமைகளைக் கொண்டுள்ள போது உற்பத்தி அல்லது பொருட்களின் பதிலிடுதல் அல்லது வியாபாரமொன்று அது மாத்திரமே அதனை எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றி முழுமையாக அறிந்துள்ள வியாபாரம் அல்லது ஒரே தன்மையுள்ள வேறேதேனும் வியாபாரங்கள் அல்லது வர்த்தக உரிமைகள் அல்லது ஏதேனும் தரவுகள், ஆவணங்கள் சித்திரங்கள் அல்லது வடிவமொன்று தொடர்பான மாதிரிகள் கண்டுபிடிப்புகள் மாதிரி, வடிவமைப்பு இரகசிய வாய்ப்பாடுகள், செயன்முறைகள் ; அல்லது

(ஏ) வியாபாரமொன்றினால் மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகள் பண்டங்களின் உற்பத்தி அல்லது செயன்முறைகளுக்கான மூலப்பொருட்கள் மற்றும் தேவையான பாவனைப் பொருட்களின் தொண்ணூறு வீதம் அல்லது அதற்கு அதிகமானவை மற்றுமொரு வியாபாரமொன்றினால் அல்லது மற்றொரு வியாபாரத்தினால் குறிப்பீடு செய்யப்பட்ட நபர்களினால் மற்றும் விநியோகத்துடன் தொடர்பான பிற நிபந்தனைகள் அத்தகைய பிற வியாபாரங்களினால் செல்வாக்கு செலுத்தியுள்ளது ;

(ஐ) தனியாள் ஒருவரினால் அல்லது அவரது உறவினரினால் அல்லது அத்தகைய தனியாள் மற்றும் அவரது உறவினர் இருவரும் இணைந்து தொழில் முயற்சி ஒன்றினைக் கட்டுப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அத்தகைய தனியாள் அல்லது அவரது உறவினரினால் கட்டுப்படுத்தப்பட்ட மற்றமொரு தொழில் முயற்சி ; அல்லது

(ஒ) தொழில் முயற்சியொன்று நிறுவனமொன்றாக, ஆட்களின் கட்டமைப்பாக அல்லது தனிப்பட்டவர்களின் குழுமமொன்றாக இருந்து அத்தகைய நிறுவனங்கள், ஆட்களின் கட்டமைப்புகள் அல்லது தனியாட்களின் குழுமமொன்றின் பத்து சதவீதத்திற்குக் குறையாத வட்டியினைக் கொண்டுள்ள பிற தொழில் முயற்சிகள் ; அல்லது

(ஓ) குறித்துரைக்கப்படும் வகையில் இரண்டு தொழில் முயற்சிகளுக்கிடையில் காணப்படும் ஏதேனும் பரஸ்பர அக்கறை.

14. **தொடர்புடைய செம்மையாக்கங்கள் :-**

பிரிவு 104 அ வின் ஏற்பாடுகளின் கீழ் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையின் அடிப்படையில் கணிப்பிடப்படும் ஒருங்கிணைந்த தொழில் முயற்சியொன்றின் வருமானம், வரிகுறைக்கப்பட்ட (அல்லது குறைக்கப்பட முடியுமான) பிறிதொரு தொழில் முயற்சிக்குச் செலுத்தப்படுமாயின் முதலில் குறிப்பிட்ட தொழில் முயற்சிக்கான கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை தீர்மானிக்கப்படுவதன் காரணமாக மற்றைய ஒருங்கிணைந்த தொழில் முயற்சியின் மீளக் கணிப்பீடு செய்யப்படமாட்டாது.

9 - 27

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.